**பெலிஅத்த பிரதேச சபை**
**ஹம்பாந்தோட்டை மாவட்டம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்பித்திருந்ததுடன், அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஜுலை 23 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து பெலிஅத்த பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொல்வனவு செய்திருந்த ரூபா 720,000 தொகை கிரயத்தையுடைய முகாமைத்துவ தகவல் முறைமையின் பெறுமதியை மற்றும் ரூபா 20,493 தொகைக்கு கொள்வனவு செய்திருந்த கணிணி கதிரைகளின் பெறுமதி என்பவற்றை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) சபை நிதியத்திலிருந்து நிறைவேற்றப்பட்டிருந்த ஒரு நிர்மாண வேலைக்காக ரூபா 44,564 தொகைக்கான கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் குறைவாகவும், மூலதன உதவிகளின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த 4 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 84,459 தொகை மிகையாகவும், கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்கான ரூபா 50,000 தொகை மிகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களில் உள்ள 04 கணக்கு விடயங்களின் மீதி மற்றும் அதனோடு தொடர்புடைய புத்தகங்கள் மற்றும் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே அவதானிக்கப்பட்ட சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 966,571 தொகையாகும்.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்கு**

2011 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான காலத்திற்கு மற்றும் 2013 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான காலப் பகுதிக்கான அறவிடப்பட வேண்டிய முறையே ரூபா 2,512,199 தொகைக்கான நிர்மான வேலை உதவி மற்றும் ரூபா 1,046,359 தொகைக்கான வாகன வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

2014 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான காலப் பகுதி தொடர்பான கூட்டுத்தொகை ரூபா 40,505,462 தொகைக்கான நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதி மற்றும் கூட்டுத்தொகை ரூபா 5,396,252 தொகைக்கான செலவுக் கடன்கொடுத்தோர் மீதிகளை செலுத்தி தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்காததுடன், செலவு கடன்கொடுத்தோர் மீதியில் அடங்கியுள்ள ரூபா 4,834.399 தொகை நீண்ட காலம் முதல் ஒய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய மீதியொன்றாகும்.

### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 272,569,939 தொகைக்கான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1987இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 152(2) | திறன் தொழிலாளர்கள் தொடர்பாக வரி அறவிடப்பட முடியுமெனினும் சபையினால் சட்டத்தரணிகள், திறன் தொழில் தொடர்பான நிறுவனங்களில் இருந்து திறந்தொழில் வரி அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571(3) | வைப்புச் செய்யப்பட்டு 02 வருட காலத்தை மிகைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 847,542 தொகைக்கான 51 வைப்பு மீதிகளை ஆதவளிப்ப செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | 2016 திசெம்பர் 29 திகதியில் 30/2016 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 11 வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 12,955,657 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,555,250 தொகை ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் | 2,547,370 | 2,393,872 | 2,333,308 | 1,391,165 | 2,848,849 | 2,751,934 | 2,677,050 | 1,336,870 |
| (ii) வாடகை | 10,178,040 | 10,337,145 | 10,424,977 | 2,488,957 | 9,498,119 | 9,200,572 | 9,243,629 | 2,576,789 |
| (iii) அனுமதிப்பத் திர கட்டணம் | 1,224,360 | 1,672,993 | 1,695,043 | 14,250 | 797,800 | 1,212,241 | 1,177,691 | 36,300 |
| (iv) ஏனைய வரு மானங்கள் | 15,318,810 | 15,374,285 | 8,333,864 | 20,348,651 | 14,713,314 | 13,789,373 | 19,688,378 | 25,829,001 |
| மொத்தம் | 29,268,580 | 29,778,295 | 22,787,192 | 24,243,023 | 27,858,082 | 26,954,120 | 32,786,748 | 29,778,960 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்கான சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 29,778,295 தொகையாக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 22,787,192 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 வீத வரி மற்றும் வரி

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 1,391,165 தொகையாக காணப்பட்டதுடன், அந்த நிலுவையை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1) (அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.4 வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 862,036 தொகைக்கான நிலுவை கடை வாடகை மீதியில் 14 கடைகளுக்கான நிலுவை மாதாந்த தவணைகள் 6 முதல் 96 வரையான காலப் பகுதி தொடர்பாக காணப்பட்டதுடன், உடன்படிக்கையின் பிரகாரம் கடைகளை திருப்பி உரித்தாக்குவதற்காக மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159 (1) இன் பிரகாரம் நிலுவை தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை

.

(ஆ) (i) பெலிஅத்த புதிய கடைத் தொகுதியில் 48 கடைகள், புதிய நூலக, பிணி ஆய்வு நிலைய கட்டிடத்தில் 25 கடைகள் மற்றும் பன்டரவத்த பொதுச் சந்தையில் 20 கடைகள் வாடகைக்கு கொடுக்கும் போது 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 இலக்கங் கொண்ட தென்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 01 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) மேற்கூறிய சுற்றறிக்கையின் 04 அம் பந்தியின் பிரகாரம் ஒரே தடவையில் செலுத்தும் பணம் அறவிடப்படாமையால் பெலியத்த புதிய கடைத் தொகுதியில் வாடகையாளர்கள் ஒன்பது பேர்களிடம் மற்றும் புதிய அலுவலக நூலக பிணி ஆய்வு கட்டிடத்தின் வாடகையாளர்கள் ஐந்து பேரிடம் 2018 மே 23 திகதி அளவில் மேலும் அறவிடப்பட வேண்டிய ஒரே தடவையில் செலுத்தும் பணத்தின் பெறுமதி ரூபா 2,181,000 தொகையாகும்.

### 2.2.5 அனுமதிப் பத்திரக் கட்டணம் மற்றும் வியாபார வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 149,150 மற்றும் 152 இன் பிரகாரம் குறிப்பிட்டுள்ளவாறு கட்டணம் அறவிடப்படாமையால் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 14,250 இற்கான அனுமதிப் பத்திரக் கட்டணம் மற்றும் ரூபா 47,000 தொகைக்கான கைத்தொழில் மற்றும் வியாபார வரி அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

### 2.2.6 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

தென்மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணமாக ரூபா 852,938 மற்றும் முத்திரை கட்டணமாக ரூபா 19,495,713 தொகை பெற வேண்டிக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கள் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் , பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதிகள் மற்றும் நலனோம்பு ஆகிய செய்பணிகள் நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செய்பணிகளை நிறைவேற்றுதல் தாமங்கள்**

(i) தென்மாகாண சபை அபிவிருத்தி திட்டம் - 2016 மற்றும் 2017 மந்திரிமார் ஏற்பாடுகளின் கீழ் பொதுக் கிணறு ஒன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 775,000 இற்கான தொகையொன்று சபைக்கு கிடைத்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) மதிப்பீட்டுத் தொகை ரூபா 620,000 இற்கான 03 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டளவில் ரூபா 365,486 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும், அவற்றின் 02 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டு இறுதியளவிலும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) திண்மக் கழிவுப் பொருள் முகமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பைகளில் ஒரு பகுதி மாத்திரம் சேதனப் பசளை செயற்களத்திற்கு அனுப்பி மீதிப் பகுதி பெலிகல்ல ஹால்பந்தெனியவில் அமைந்துள்ள தனியார் காணி ஒன்றில் குவிக்கப்பட்டு காணப்பட்டது.

(ii) சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சேதனைப் பசளை உற்பத்திக்காக பயன்படுத்த முடியாத மீள் சுழற்சி செய்யக்கூடிய ஏனைய திண்ம கழிவுப் பொருட்கள் மீள் சுழற்சிக்காக பயன்படுத்துதல் மற்றும் போதியளவு தீ அணைக்கும் உபகரணங்கள் மற்றும் வசதிகள் செயற்படுத்தும் இடத்தில் நிறுவுதல் ஆகிய ஆணைகள் மற்றும் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில் நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகளாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசதத்தில் பொது மக்களின் வாழ்க்கை தரத்தை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

**(அ) பண்டக் கணிப்பீட்டு விதப்புரைகளை செயற்படுத்தாமை**

2016 பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் மூலம் சுட்டிக் காட்டியுள்ள 11 பண்டங்கள் பற்றாக்குறை தொடர்பாக விதப்புரை 2017 அக்தோபர் 31 திகதி அளவிலும் செயற்படுத்தியிருக்கவில்லை.

**(ஆ) உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக கொடிக் கம்பங்கள் வழங்குதல்**

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து கிடைத்திருந்த 600 கொடிக் கம்பங்களில் 2014 ஆண்டு திசெம்பர் மாதத்தில் வெளித் தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 279 கம்பங்களை திருப்பி பெறுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை .

**3.3 மனித வள முகாமைத்துவம்**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை சேர்ந்த 12 பதவிகளில் 35 பேரின் மிகையும் மற்றும் 9 பதவிகளில் 17 பேரின் வெற்றிடங்களும் காணப்பட்டன மிகை பதவியணியை முறைப்படுத்துவதற்கும் அதேபோல வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.4 செயற்பாட்டு திறமையின்மை**

**(அ) பெலிஅத்த புதிய வியாபார கட்டிடத் தொகுதியில் இரண்டாவது மற்றும் மூன்றாவது மாடிகளை வாடகைக்கு கொடுத்தல்**

(i) மேற்கூறிய கட்டிடத்தின் வரைபின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த இரண்டாம் மூன்றாம் மாடிகளில் வெற்று வெளியினை சபையின் அங்கீகாரம் இன்றி முற்றாக மறைத்து வாடகைக்காரரினால் வியாபார அலுவல்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) மேற்கூறிய மாடிகளை வாடகைக்கு கொடுப்பது தொடர்பாக உடன்படிக்கைக்கு முரணான முறையில் வாடகையாளரினால் இரண்டாம் மாடியில் 02 ஆம் இலக்கக் கடையை வியபாரத்திற்காக பயன்படுத்தல் மற்றும் வர்த்தகக் கட்டிடத் தொகுதியில் பின்பகுதியில் இரண்டாம் மாடியில் இருந்து மூன்றாம் மாடி ஒன்று என கொங்கிரீட் தட்டு போட்டு பயன்படுத்தக் கூடிய விதமாக தயாரித்திருத்தல் என்பன தொடர்பாக உரிய நடவடிக்கை எடுபதற்கு செயற்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பெலிஅத்த புதிய வர்த்தக கட்டிடத் தொகுதியில் இரண்டாம் மாடியில் 2 ஆம் இலக்கம் மற்றும் 3 ஆம் இலக்க கடைகளை வாடகைக்கு கொடுத்தல்**

(i) 2009 ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் வாடகைக்கு கொடுத்திருந்த 2 ஆம் இலக்க கடை மற்றும் 2007 ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் வாடகைக்கு கொடுத்திருந்த பின்னர் சபைத் தீர்மானம் ஒன்றின் மூலம் 2013 ஆண்டின் போது மீண்டும் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த 03 ஆம் இலக்க கடை தொடர்பாக அக்காலப்பகுதிக்கு உரிய சிட்டையிடப்பட்ட வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) இந்த கடைகளுக்காக அறவிடப்பட வேண்டிய ஒரே தடவையில் செலுத்தும் பணத்தில் இருந்து முறையே ரூபா 238,000 தொகை மற்றும்

ரூபா 200,000 தொகை மீளாய்வாண்டு இறுதி வரையும் நிலுவையாகக் காணப்பட்டது.

**(இ) பெலிஅத்த புதிய வர்த்தக கட்டிடத் தொகுதியில் முதலாம் மாடியில் 34 ஆம் இலக்கக் கடையை வாடகைக்கு கொடுத்தல்.**

2008 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 திகதி உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளாமல் வாடகையாளருக்கு வழங்கியிருந்த இந்த கடைகளுக்காக அந்த நாள் முதல் 2017 ஆகஸ்ட் மாதம் வரை கடை வாடகை சிட்டை இடப்பட்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

சபை துண்டுக் கற்கள் உற்பத்தி மற்றும் தும்பு ஆலை செயற்திட்டத்திற்கான இயந்திரங்கள் 01 வருடம் முதல் 04 வருடங்கள் வரையான காலம் முதலும், 6 கனபி குடில்கள் மற்றும் சேதனப்பசளை செயற்திட்டத்தின் மல்டி சொபர் இயந்திரம் 02 வருடத்திற்கு அன்மித்த காலம் முதல், புகைபிடிக்கும் இயந்திரம் 4 வருடங்களை அண்மித்த காலம் முதலும், 03 வாகனங்கள் 02 வருட முதல் 03 வருடங்கள் வரையான காலம் முதலும் பயன்படுத்தப்படாமல் செயற்படாது காணப்பட்டது.

### 3.5.2 வாகன பயன்பாடு

சபையினால் பயன்படுத்தப்படும் 12 வாகனங்களின் உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் 11 வாகனங்களின் மீளாய்வாண்டிற்கான வருமான அனுமதிப் பத்திர மற்றும் ஒரு வாகனத்தின் வருடாந்த காப்புறுதி சான்றிதழ் பெற்றிருக்கவில்லை.

### 3.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

சபைக்கு சொந்தமன வாகனத் தரிப்பிடத்தில் நீண்ட காலமாக தனியார் நிறுவனமொன்றின் பஸ் மற்றும் வான் வண்டிகள் நிறுத்தி வைப்பதற்காக இடமளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிறுவனத்திலிருந்து கட்டணமொன்றும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.7 ஒப்பந்த வேலை நிருவாகம்

உள்ளூராட்சி திணைக்களத்தின் ஏற்பாடுகளின் கீழ் உபயரத்த பாதையை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக 2017 நவம்பர் 17 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனை மற்றும் கொங்கிரீட் அச்சுகளின் பண்புகள் தொடர்பாக 2017 திசெம்பர் 08 திகதி பெற்றிருந்த தர ஆய்வுகூட பெறுபேறுகளின் பிரகாரம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட அச்சு கற்கள் அனைத்தும் உரிய நியமத்தில் காணப்படவில்லை என உறுதிபடுத்தப்பட்டது. அதன் பிரகாரம் இந்த நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்தியிருந்த ரூபா 387,411 தொகை பயன்தரக்கூடிய கொடுப்பனவு ஒன்றல்ல என அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளிடையே கீழ்வருமாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு பயன்தரக் கூடிய

நிதி முகாமைத்துவக் கட்டுபாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 02 வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 12,226,299 தொகையாக காணப்பட்டதுடன், அந்த பெறுமதிகள் முறையே 14 சதவீதம் மற்றும் 30 சதவீதமாக காணப்பட்டது.

(ஆ) பிரயாணச் செலவு விடயத்தின் பிரதிகூல முரண் ரூபா115,060 தொகையாக காணப்பட்டதுடன் அப்பெறுமதி 25 சதவீதமாகும்.

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

2009 ஜூன் 09 திகதிய DMA/2009(i) ஆம் இலக்கம் முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நடாத்தப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டின் 02 குழுக் கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டுள்ளன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | | குறைபாடு |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | நிதி கூற்றுக்களில் மற்றும் துணைப் பதிவேடுகளில் பெறுமதிகளிடையே வித்தியாசங்கள் காணப்படல். |
| | | (ii) | பலவின வைப்பு மீதிகளை தீர்த்து பதி வேட்டை நாளதுவரை ஆக்கியிருக்காமை. |
| (ஆ) | வருமான நிருவாகம் | (i) | புதிய வருமானம் உழைக்கும் வழிகளை இனங்காண்பது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்காமை. |
| | | (ii) | உடன்படிக்கை மேற்கொள்ளாமல் மற்றும் முறையான பெறுமதி மதிப்பீடு ஒன்று இன்றி கடைகளை வாடகைக்கு கொடுத்திருந்த சந்தர்பங்கள் காணப்படல். |
| | | (iii) | நீண்ட காலமாக சிட்டை இடப்படாத கடைகள் காணப்படல். |
| (இ) | பாதீட்டு கட்டுபாடு | (i) | பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகள் இடையே கணிசமான முரண்கள் காணப்படல். |
| | | (ii) | பாதீட்டு இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கை எடுக்காமை. |